செ.வெ.எண்: 752/2016 நாள்: 24.10.2016

# பத்திரிகை செய்தி

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீனப்பட்டாசு விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். கலெக்டர் அறிவிப்பு.

**மாவட்ட கலெக்டர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:**

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் வெடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு மற்றும் காயமடைவதினையும் தவிர்க்கும் விதமாக குமரி மாவட்டத்தில் பட்டாசு உரிமம் பெற்று தற்போது செயலாக்கத்திலுள்ள பட்டாசு உரிமதாரர்களில் அனுமதி வழங்கப்பட்ட நபர்கள் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ள இடங்களில் அனுமதி வழங்கப்பட்ட அளவில் பட்டாசு விற்பனை செய்ய வேண்டும். உரிமம் இல்லாமல் அனுமதி இல்லாத இடங்களில் பட்டாசு விற்பனை செய்வதும், சீனப்பட்டாசுகள் விற்பனை செய்வதும் குற்றமாகும். ஆகவே மேற்கூறிய நிபந்தனைகளை கருத்தில் கொண்டு விதிமுறைகள் மீறல்கள் ஏதேனும் கண்டறியப்பட்டால் பொது மக்கள் அருகில் உள்ள காவல் நிலையங்களிலும், சம்பந்தப்பட்ட வருவாய் துறை அலுவலகங்களிலும் விபரம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.